

சென்னையில் நடைபெற்ற, கவிக்கொண்டல் மா.செங்குட்டுவனின் மகன் வழி பேரன் தி.அ.செம்பியன் – வா.நிவாஸினி இணையரின் திருமண வரவேற்பு விழாவில், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

# தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுடன் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திப்பு!





சென்னை,ஜூலை.6-

தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் நேற்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்தார். போருக்குப் பிந்தைய சூழலில் ஈழத்தமிழர்கள் சந்திக்கும் நெருக்கடிகளை எதிர்க்கட்சித் தலைவருக்கு அவர் விரிவாக விளக்கினார்.

கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கடந்த டிசம்பர் மாதம் அவரைச் சந்தித்து, ஈழத்தமிழர் பிரச்சினைகள் குறித்து எடுத்துரைத்ததையும், உடனடியாக ஒன்றிய அரசுக்கு கழகத் தலைவர் அவர்கள் கடிதம் எழுதி வலியுறுத்தியதையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் சுட்டிக்காட்டி னார்.

தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர் உரிமைகளுக்காக பேரறிஞர் அண்ணா காலம் முதல் தற்போது வரை தொடர்ந்து குரல்கொடுத்துத் துணை நின்று வரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உலகத்தமிழர்கள் அறிவார்கள். அந்த வகையில், ஈழத்தமிழர் நலன் சார்ந்து அவர் கூறியவற்றை, கழகத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தரும் வகையில் செயல்படுவோம் என்று அவருக்கு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின்போது, நம் முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூலை வழங்கி, 'இலங்கை தி.மு.க.' குறித்து எழுத்தாளர் ஷோபாசக்தி அவர்கள் எழுதிய கட்டுரையும் அந்த நூலில் இடம் பெற்றிருப்பதை உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

## மீனம்பாக்கம் பேரூர் கழக முன்னாள் செயலாளர் மீ.அ.வை.இளம்பரிதி எழுதிய

# "விசித்திர உறவுகளும், நினைவலைகளும்" நூல் -டி.ஆர்.பாலு எம்.பி. வெளியிட்டார்!

## மீ.அ.வைதியலிங்கம் முன்னிலை! ஆர்.எஸ். பாரதி – அ.தமிழ்மாறன் – எஸ்.ஆர்.ராஜா – இ.கருணாநிதி பங்கேற்பு!



சென்னை, ஜூலை 6-

மீனம்பாக்கம் பேரூர் தி.மு.க. முன்னாள் செயலாளர், மீனம்பாக்கம் பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் மீ.அ.வை.இளம்பரிதி அவர்கள் எழுதிய "விசித்திர உறவுகளும், நினைவலைகளும்" நூல் வெளியீட்டு விழா தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ .அ.வைதியலிங்கம், முன்னிலையில் நடைபெற்றது.

கழக பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் முதல் தொகுப்பினை வெளியிட, மாநில சுற்று சூழல் அணி துணை செயலாளர் சாய்ஜெயகாந்த் பாரதி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி இரண்டாவது தொகுப்பினை வெளியிட, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மாறன் பெற்றுக் கொண்டார்.

தாம்பரம் மாநகரச் செயலாளர், எஸ்.ஆர்.ராஜா, காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், மண்டல குழு தலைவர் என்.சந்திரன், நடேசன் சந்திரன், பகுதி செயலாளர்கள் பா.குணாளன், திருநீர்மலை ஜெயகுமார், கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி. பாபு, கோவிலம்பாக்கம் A.ரங்கநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பாலவாக்கம். மு.மனோகரன், மாநகர அமைப்பாளர்கள் சிட்லபாக்கம் E.மனோகரன், E இரா.விஜயகுமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி . செ.அமுதபிரியா, T.R.கோபி, வட்ட செயலாளர்கள் ப.கிருஷ்ணமூர்த்தி, அவர்களை நடராசன் த.மதிவாணன், மாவட்ட பிரதிநிதி கே.தனசேகரன், Corley' 79 குழும நண்பர்கள், ச.கிருஷ்ணமூர்த்தி. BDO.Rtd, திருமதி.ஜெயாசெல்வம். கவுல்பஜார் இளங்கோ, ராஜா, திருவஞ்சேரி சுரேஷ்பாபு, தாம்பரம் புருஷோத்தமன், மாடம்பாக்கம் த. ராஜாராம் சிட்லபாக்கம் சி.புஷ்பராஜ், செம்பாக்கம் கோகுல், மேடவாக்கம் ந.வேதகிரி, வை.குமரன், வை.மு.ஆதித்யா பல்லாவரம் தெற்கு செயலாளர் வை.தா.ர.மூர்த்தி, இ.பொழில் நம்பி, பி.அப்பாதுரை, Varun ம.கோகுலகிருஷ்ணன், ஆகியோருடன் கழக தோழர்கள், நண்பர்கள், ஆசிரியரின் குடும்பத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கொளத்தூர் கிழக்குப் பகுதி - 68 (அ) வட்டக் கழகச் செயலாளர்

# பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண விழா: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை!

## ஆர்.எஸ்.பாரதி - சா.சி.சிவசங்கர் - எஸ்.ஜெகத்ரட்சகன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை.6 –

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் – எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ. வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி.கார்த்திகாராஜம் ஆகியோரின் திருமண வரவேற்பு



விழா 11.07.2026 – சனிக்கிழமை, மாலை 6.30 மணிக்கு, மணவிழா 12.07.2026 – ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி, கே. சந்துரு, தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி., முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ். சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி., பி.டி சி.செல்வராஜ், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகனகிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.



# தி.மு.க. இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | ம.ஜெயகோபி, த/பெ மதுரை, 12, கைலாசபுரம் 3–வது தெரு, மயிலாப்பூர், சென்னை – 600 004. |
| 2. | மா.ராஜலட்சுமி, க/பெ மாணிக்கம், 47–ஏ, நஞ்சுண்டாபுரம், சோமையனூர், தடாகம், கோயம்புத்தூர் – 641 108. |
| 3. | க.முகமது அப்பாஸ், த/பெ கருப்பையா, 9–1–2, அம்பேத்கர் தெரு, பி.மீனாட்சிபுரம், போடிநாயக்கனூர், தேனி – 625 582. |
| 4. | மு.சந்தோஷ், த/பெ முனுசாமி, 2/227–ஏ, ஒத்தவாடைத் தெரு, முருக்கம்பட்டு, திருத்தணி, திருவள்ளூர் – 631 209. |
| 5. | செ.பிரவீன்குமார், த/பெ செல்வம், 10, ஈ.வி.கே.சம்பத் தெரு, அன்னை சத்யா நகர், சென்னை – 600 083. |
| 6. | பா.சந்தோஷ், த/பெ பாலசுப்ரமணியன், 40, அக்ரஹாரம் தெரு, பனங்குடி, நன்னிலம், திருவாரூர் – 609 504. |
| 7. | கோ.சேகர், த/பெ கோவிந்தசாமி, 7, டாக்டர் கலைஞர் நகர், 9–வது குறுக்குத் தெரு, திருவொற்றியூர், சென்னை – 600 019. |
| 8. | ச.ராஜ்குமார், த/பெ சக்திவேல், 330, மாரியம்மன் கோயில் வீதி, கீரம்பூர், துறையூர், திருச்சி – 621 002. |
| 9. | க.ஜீவா, த/பெ கனகராஜ், 3/110, இந்திரா நகர் மேற்கு, பட்டணம், சூலூர், கோயம்புத்தூர்–641 016. |
| 10. | தா.சண்முகவேல், த/பெ தாயுமானசாமி, எல்.இ–2, லாயிட்ஸ் குடியிருப்பு, இராயப்பேட்டை, சென்னை – 600 014. |
| 11. | த.மதுபாலா த/பெ தர்ம கந்தன், 1/427–இ, என்.ஜி.ஓ. குடியிருப்பு, ரிசர்வ் லைன், சிவகாசி, விருதுநகர் – 626 124. |
| 12. | ந.தங்கராஜ், த/பெ நல்லசிவம், புளியம்பட்டி, வடுகம்பட்டி, குஜிலியம்பாறை, திண்டுக்கல் – 624 703. |
| 13. | சே.விக்னேஷ், த/பெ சேகர், 1/15, மேட்டுத் தெரு, வரதராஜபுரம், நசரத்பேட்டை, திருவள்ளூர் – 600 123. |
| 14. | வெ.லோகநாதன், த/பெ வெங்கடாசலம், 268, 5–வது தெரு, எஸ்.ஏ.குடியிருப்பு, சர்மா நகர், வியாசர்பாடி, சென்னை – 600 039. |
| 15. | ரா.ராஜசேகர், த/பெ ராஜூ, 5/67, கிழக்குத் தெரு, தென்பழஞ்சி, திருப்பரங்குன்றம், மதுரை – 625 021. |
| 16. | மு.அமுதவேல், த/பெ முருகன், 3, வடக்குத் தெரு, வெங்கரை, பரமத்திவேலூர், நாமக்கல்–637 208. |
| 17. | க.மாவியா மெஹர், த/பெ காதர் பாஷா, 19/12, தெற்கு ராஜா தெரு, ஆலந்தூர், சென்னை–600016. |
| 18. | ச.பொற்செல்வன், த/பெ சரவணன், 581, ஏகாங்கிபுரம் 4–வது தெரு, அயன்புரம், சென்னை – 600 023. |
| 19. | ர.ஆசிதா, த/பெ ரஞ்சித்குமார், 183, அம்மன் கோயில் தெரு, நம்பியார் நகர், நாகப்பட்டினம் – 611 001. |
| 20. | கி.ஐய்யனாரப்பன், த/பெ கிருஷ்ணன், 11, பிரதான தெரு, பெரிய குடியிருப்பு, மலைப்பாளையம், கருங்குழி, மதுராந்தகம், காஞ்சிபுரம் – 603 303. |
| 21. | மு.கமலேஷ், த/பெ முத்துக்குமார், 51, வேலுடையான் நகர், நெய்வேலி, கடலூர் – 607 801. |
| 22. | டி.என்.ஜெயராமன், த/பெ நல்லுடையார், பிள்ளையார் கோயில் தெரு, வண்ணாரப்பேட்டை, தஞ்சாவூர் – 613 601. |
| 23. | ச.வினோத்குமார், த/பெ சரவணன், 10, கற்பக கன்னியம்மன் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. |
| 24. | ஜா.பிரேமினி, க/பெ அந்தோணி நசரேன், 18/22, வில்லியம் பூத், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி – 629 702. |
| 25. | செ.சர்மிளா, த/பெ செல்வராஜ், 11, நேதாஜி நகர், 2–வது தெரு, போரூர், சென்னை – 600 116. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 04.07.2026

கலைஞர் 100 1924 - 2023






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை யொட்டி செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டர் அணி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையிலும், தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர்.அருள் (எ) அருண்குமார் ஏற்பாட்டிலும் நடைபெற்ற 500 பொதுமக்களுக்கு 30 நாட்களாக அறுசுவை உணவு, அன்னதானம் நிறைவு விழாவில் மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றி 500 பொதுமக்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முகம் பொறித்த தலா 1 கிராம் வெள்ளி நாணயத்தை வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, து.மூர்த்தி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.